**தெஹிஓவிட பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தெஹிஓவிட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தெஹிஓவிட பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்

மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை -** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படாததால் 2023 ஆண்டில் கடன்கொடுனர்களிற்கு செலுத்திய ரூபா 38,860 தொகை அவ்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | 2024 இறுதிக் கணக்கில் சீராக்குவதென. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | இயந்திர திருத்தற் செலவு ரூபா 969,366 தொகை இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு** | **இணங்காமை** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 (3) | ஆண்டு 02 இனை விஞ்சிய ரூபா 1,731,530 ஆன 91 வைப்புக்களை தீர்த்திருக்காததுடன் வருமானத்திற்கு எடுக்க வேண்டிய ரூபா 248,500 ஆன 05 வைப்புக்கள் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. | நிதிப் பிரமாணம் பிரகாரம் 02 ஆண்டுகள் கடந்த பின்னர் அனைத்து தொகையையும் வருமானத்திற்கு எடுக்க பிரதேச சபைக்கு முடியாதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி மற்றும் மறுசீரமைப்பு | ஆண்டு 05 இற்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய | கொள்கை மற்றும் தீர்மானம் எடுக்க | சுற்றறிக்கை பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவையின் இலக்கம் 02/2010 கொண்ட சுற்றறிக்கையின் 4(xiii) பந்தி | வீதவரி ஆதனங்கள், 15 ஆண்களாக செய்யப்பட்டு இருக்கவில்லை. | உதவும் குழுவின் மூலம் 2024 ஆண்டு முதல் புதிய மதிப்பீட்டை ஏற்றுக் கொள்ள மற்றும் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 திகதிய 03/2020 சுற்றறிக்கை | | | |
| (i) | 14 பந்தி | இறைச்சி மற்றும் மீன் வியாபார நிலையங்களிற்காக வருடாந்த குறைந்த பட்ச மணு தொகையை 03 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிட்டிருக்கவில்லை. | ஆதனம் 07 இற்கான மதிப்பீட்டு அறிக்கை தற்போது கிடைத்துள்ளதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 4 மற்றும் 5 பந்தி | தெஹிஓவிட புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் 05 கடை அறைகளிற்காக வாடகை தொடர்பான நிபந்தனைகளுடன் கூடியதாக உடன்படிக்கை செய்யப்படாததால் பிணை வைப்பு, நிலுவை வாடகை மற்றும் தண்டமாக ரூபா 1,947,364 இனை அறிவிட முடியாதுள்ளது. | நிலுவை தொகையை 2024.06.30 அளவில் செலுத்தி முடிவுறுத்துமாறு அறிவித்துள்ளதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,726,381 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,639,872 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

சுபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,118,000 | 4,370,619 | 4,942,471 | 3,499,921 | 4,573,000 | 4,783,327 | 4,906,095 | 3,969,913 |
| வாடகை | 14,218,660 | 14,868,896 | 14,984,474 | 5,581,456 | 13,410,400 | 12,733,800 | 11,956,293 | 5,893,625 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 1,017,200 | 1,184,111 | 1,146,111 | - | 505,200 | 435,548 | 463,548 | - |
| ஏனைய வருமானம் | 9,003,600 | 11,379,281 | 10,807,170 | 861,193 | 6,403,800 | 9,003,177 | 8,014,503 | 1,039,357 |
| | 28,357,460 | 31,802,907 | 31,880,226 | 9,942,570 | 24,892,400 | 26,955,852 | 25,340,439 | 10,902,895 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறைச்சிக் கடை 03 இல் மற்றும் மீன் தட்டொன்றில் இருந்து 1991 ஆண்டு முதல் 1997 ஆண்டு வரையான காலத்திற்காக பெறவேண்டிய கடை வாடகை மற்றும் தண்டம் ரூபா 94,281 இனை பதிவழிக்க ஆளுனரிற்கு அனுப்பப்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை 06 ஆதனங்களை குத்தகை வழங்க முடியாது போனதில் ரூபா 5,945,873 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் இல்லாதிருந்தது. | விலைமனு கோரிய போதும் விலைமனு சமர்ப்பிக்கப்படவில்லை என. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய நிலுவை வீதவரி மீதி ரூபா 1,848,514 ஆனதுடன், அம் மீதியினுள் 01 ஆண்டை விஞ்சிய ரூபா 1,262,558 மீதியானது. | வீதவரி செலுத்தாத ஆதனத்திற்காக தடை அறிவித்தல் அனுப்பி 2024 சனவரி மாதத்தில் ஆதனத் தடை நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்தப்பட்டது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,650,445 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியில் 05 ஆண்டுகளை விஞ்சிய அறவிட வேண்டிய மீதி ரூபா 1,218,601 ஆனது. | காணப்படும் நிலுவையை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 5,339,706 ஆன நிலுவை கடையறை வாடகை மீதியில் 01 ஆண்டை விஞ்சிய மீதி ரூபா 4,586,236 மீதி ஆனது. | நிலுவை தொகையை 2024 ஜூன் 30 திகதியளவில் செலுத்தி முடிக்குமாறு அறிவித்துள்ளதென. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 308,322 ஆன நிலுவை கடை வாடகை மீதியில் 01 ஆண்டை விஞ்சிய மீதி ரூபா 258,622 ஆனது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தீர்க்கப்படாத ரூபா 158,225 ஆன வரவு மீதி 2018 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்றது. | மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | மீதியை தீர்க்க வேண்டும். |
| (ஆ) | தீகளவலத்த நீர் கருத்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கிணற்றில் நீரை அருந்த பொருத்தமற்றதால் அந்த நிர்மாணத்திற்காக 2022 ஆகஸ்ட் மாதம் செலுத்த வேண்டிய ரூபா 687,231 தொகை பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கொள்கை மற்றும் தீர்மானம் எடுக்க உதவும் குழுவிற்கு கொடுப்பனவு தீர்மானிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | பொது வைப்பு கணக்கு மீதியை தீர்க்க வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய ரூபா 3,912,081 ஆன மீதியினுள் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டிற்கும் இடையில் நிலவும் ரூபா 225,719 ஆன மீதியும் 05 ஆண்டுகளை விட பழைய ரூபா 437,585 ஆன மீதியுமானது. | 2024 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரியான காலப் பகுப்பாய்வை சமர்ப்பிப்பதென. | மீதியை தீர்க்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 803,000 செலவில் நிர்மாணித்த மாதொல ஹெல பொஜுன்ஹலயின் நிர்மாணங்கள் பூர்த்தியாகி 06 மாதங்கள் கடந்துள்ள போதும், இதுவரையும் பயன்படுத்தாது நிலவியது. | அதனை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்களை பயன்படுத்தாது வைக்கக்கூடாது. |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 802,200 ஆன முத்திரை வரி வைப்பு மீதியில் ரூபா 691,752 தொகை ஆண்டு 2015 – 2016 இடையில் பழையதாகும். | குறித்த மீதியை உறுதி செய்து கொண்டு தீர்ப்பதென. | தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான ரூபா 587,284 ஆன வைப்ரேடர் ரோடர் 06 மாதங்களிற்கு அதிக காலமாக பயன்படுத்தாது காணப்பட்டது. | இந்த நாட்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு கேள்வி இல்லாததால் மற்றும் திருத்த செலவு அதிகமாகையால் இது பயன்படுத்தாது இருப்பதென. | திருத்தி பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2015 ஆண்டில் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 2,594,995 ஆன கம்பெக்டர் டேலர் கிடைத்த திகதி முதல் பயன்படுத்தாது வாகன தரிப்பிடமொன்றில் துருப்பிடித்து காணப்பட்டது. | கம்பெக்டர் வாகனத்திற்கு குப்பைகளை வேறாக்கி சேகரிக்க முடியாமை மற்றும் திண்மக் கழிவு நிலையத்திற்கு செலுத்துவ கடினமாகையால் பயன்படுத்தவதில்லை. | சொத்துக்களை பயன்படுத்தாது வைத்திருக்கக் கூடாது. |
| (இ) | ரூபா 3,000,000 ஆன நோயாளர் வண்டியை சுவீகரித்திருக்கவில்லை. | சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு கோரப்பட்டுள்ளதென. | சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகார 60 ஆளணியினரில் 26 வெற்றிடங்களானது. சேவை உடன்படிக்கையின் மீது 24 பதவிகளும், பொறுப்பேற்பவருக்கு தனிப்பட்ட வகையில் 09 பேர்களும் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. | வெற்றிடங்களை நிரப்ப கோரப்பட்டுள்ளது. அங்கீகார ஆளணி போதாமையால் சேவை உடன்படிக்கையின் மீது மற்றும் பொறுப்பேற்பவருக்கு தனிப்பட்ட வகையிலான பதிவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென. | ஆளணி எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |